அடுத்தடுத்து கோவை வரும் பிரதமர் மோடி-முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின்

பிரதமர் நரேந்திர மோடி வருகிற 19–ந் தேதி தனி விமானத்தில் கோவை வருகிறார். 3 நாட்கள் நடைபெறும் இயற்கை விவசாய மாநாட்டை பிரதமர் மோடி தொடங்கி வைக்கிறார். மாநாட்டில் தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட தென்னிந்திய மாநிலங்களை சேர்ந்த 5 ஆயிரம் இயற்கை விவசாயிகள் பங்கேற்க உள்ளனர்.மேலும் 50 இயற்கை வேளாண் விஞ்ஞானிகளுடன் பிரதமர் மோடி கலந்துரையாடுகிறார். இந்த நிகழ்ச்சியை முடித்து கொண்டு அவர் டெல்லி புறப்பட்டு செல்கிறார்.

முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் வருகிற 26–ந் தேதி கோவைக்கு வர உள்ளார். அன்றைய தினம் அவர் கோவை மத்திய சிறைச்சாலை அருகே புதிதாக கட்டப்பட்டுள்ள செம்மொழி பூங்காவை திறந்து வைக்கிறார். ஒருவார கால இடைவெளியில் அடுத்தடுத்து பிரதமர் மோடி மற்றும் தமிழக முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆகியோர் கோவைக்கு வர உள்ளதால் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து கோவை மாநகர போலீசார் மற்றும் அதிகாரிகள் ஆலோசனை நடத்த உள்ளனர்.

சூறைக்காற்றால் விசைப்படகுகள் கடலுக்கு செல்ல தடை

வங்கக்கடலில் பலத்த சூறைக்காற்று வீசும் என சென்னை வானிலை மையம் அறிவித்துள்ள தையடுத்து, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இன்று முதல் ராமநாதபுரம் மாவட்டத்தில் விசைப்படகு, நாட்டுபடகு மீனவர்கள் மறு அறிவிப்பு வரும்வரை கடலுக்கு செல்ல மீன்வளத்துறை தடை விதித்துள்ளது. அதன்படி இன்று ராமேசுவரம், மண்டபம் பகுதியில் மீனவர்கள் கடலுக்கு செல்வதற்கான அனுமதி டோக்கன் வழங்கப் படவில்லை. நாட்டுப்படகு மீனவர்களும் இன்று கடலுக்கு செல்லவில்லை. ராமேசுவரம் துறைமுக பகுதியில் திடீர் மீன்பிடி தடையால் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள், மீன்பிடி தொழிலை சார்ந்த வர்கள் பாதிக்கப்பட்டனர்.

வைகை அணையில் தண்ணீர் திறப்பு நிறுத்தம்

வைகை அணையின் மொத்த உயரம் 71 அடி. நீர்மட்டம் 67 அடிக்கு மேல் இருந்தால் மட்டுமே கால்வாய், மதகுகள் வழியாக அணையில் இருந்து தண்ணீர் திறக்க முடியும். இந்த நிலையில் இன்று காலை வைகை அணையின் நீர்மட்டம் 66.90 அடியாக உள்ளது. இதன் காரணமாக 58–ம் கால்வாய் வழியாக வெளியேறிய தண்ணீர் நின்றுபோனது. அணைக்கு வரும் தண்ணீரின் அளவை விட வெளியேற்றப்படும் தண்ணீரின் அளவு அதிகரித்து காணப்ப டுவதால் தொடர்ந்து சரியும் நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக 58–ம் கால்வாய் பாசனத்தை நம்பி இருந்த விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

லாரி டிரைவர் வெட்டிக்கொலை

மதுரை மாவட்டம் உசிலம்பட்டி அருகே உள்ள மாதரை கிராமத்தை சேர்ந்தவர் போஸ். இவரது மூத்த மகன் செல்லபாண்டி ஆட்டோ டிரைவராகவும், 2–வது மகன் ராஜபாண்டி லாரி டிரைவராகவும் பணியாற்றி வந்தனர். ராஜபாண்டி தனது மனைவியுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்து வாழ்ந்து வந்தார். இதற்கிடையில் ராஜபாண்டி, தந்தையிடம் தனக்கு 2–வது திருமணம் செய்து வைக்குமாறு கூறி உள்ளார்.

இதில் தந்தை, மகனுக்கும் அடிக்கடி பிரச்சினை ஏற்பட்டது. நேற்று மது குடித்து விட்டு ராஜபாண்டி வீட்டிற்கு வந்த அவர் மீண்டும் தந்தையுடன் தகராறு செய்தார். இதை அண்ணன் செல்லபாண்டி தடுத்துள்ளார். அப்போது ராஜபாண்டி வீட்டில் இருந்த அரிவாளை எடுத்து செல்லபாண்டியை வெட்டினார். அதிர்ச்சியடைந்த அவர் அரிவாளை பறித்து ராஜ பாண்டியை சரமாரியாக வெட்டினார். இதில் தலையில் பலத்த காயமடைந்த ராஜபாண்டி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக இறந்தார்.

மோட்டார் சைக்கிள்கள் விபத்தில் 2 பேர் பலி

சென்னை வண்டலூர் பகுதியை சேர்ந்தவர் சூர்யா(வயது27). இவர் செய்யூர் பகுதியில் உள்ள ஒரு தனியார் கல்லூரியில் பேராசிரியராக பணியாற்றி வந்தார். இவர் நேற்று மாலை கிழக்கு கடற்கரை சாலை வழியாக அவரது சொந்த ஊருக்கு சென்று உள்ளார். நேற்று இரவு 10 மணிக்கு அந்த வழியாக மரக்காணம் அருகே கூனி மேடு மாரியம்மன் கோவில் பகுதியை சேர்ந்த கிருஷ்ணன்(26), அரவிந்த்(32) ஆகிய இருவரும் ஸ்கூட்டியில் புதுவை பகுதியில் இருந்து கூனி மேட்டிற்கு சென்றுள்ளனர்.

மரக்காணம் அருகே ரங்கநாதபுரம் என்ற இடத்தில் கிருஷ்ணன் அவரது ஸ்கூட்டியை சாலையின் குறுக்கே திருப்பி உள்ளார். அப்போது எதிர்பாராத விதமாக சூர்யா ஓட்டி வந்த மோட்டார் சைக்கிள் கிருஷ்ணன் ஓட்டி வந்த ஸ்கூட்டி மீது மோதி உள்ளது. இந்த விபத்தில் 3 பேரும் படுகாயம் அடைந்தனர். இதில் சிகிச்சை பலனின்றி நேற்று நள்ளிரவு சூர்யா மற்றும் கிருஷ்ணன் இருவரும் பரிதாபமாக இறந்து விட்டனர். அரவிந்த் தொடர்ந்து ஜிப்மர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இளம்பெண் படத்தை ஆபாசமாக பதிவிட்ட டிரைவர் கைது

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தை சேர்ந்த 35 வயது பெண்ணின் ஆபாச படங்கள் சமூக வலைதளங்களில் பரவியதால் அவர் அதிர்ச்சி அடைந்தார். இது குறித்து போலீசில் புகார் அளித்தார். போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டனர். இதில் பெண்ணின் புகைப்படத்தை சமூக வலைதளங்களில் பரவவிட்டது தூத்துக்குடியை சேர்ந்த ஆனந்த் (வயது40) என தெரிய வந்தது. அவரது செல்போனில் மேலும் சில பெண்களின் புகைப்படங்கள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து போலீசார் அவரை கைது செய்து திண்டுக்கல் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

தந்தையை அடித்துக்கொன்ற மகன் கைது

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் அருகே இஞ்சிக்கொள்ளையை அடுத்துள்ள ஆண்டிருப்பு கிராமத்தை சேர்ந்தவர் செல்வம். இவரது மகன் வெங்கடேசன் நேற்று மாலை தந்தை செல்வத்திடம், தகராறில் ஈடுபட்டுள்ளார். இதில் ஆத்திரம் அடைந்த வெங்கடேசன், தனது தந்தை என்றும் பாராமல் செல்வத்தின் தலையில் சேரால் அடித்து உள்ளார். இதில் படுகாயம் அடைந்தவர் அவர் சம்பவ இடத்திலே பரிதாபமாக உயிரிழந்தார். போலீசார் செல்வத்தின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக கும்பகோணம் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். தந்தையை கொலை செய்த வெங்கடேசனை போலீசார் கைது செய்தனர்.

அ.ம.மு.க. அமைப்பு செயலாளர்

முன்னாள் தாம்பரம் நகர மன்ற தலைவர் கரிகாலன் இல்ல திருமண விழா

டிடிவி தினகரன் பங்கேற்பு

சென்னை, நவ.15–

அம்மா மக்கள் முன்னேற்ற கழக அமைப்பு செயலாளரும், பொறியாளர் அணி செயலாளரும், மண்டல பொறுப்பாளரும், செங்கல்பட்டு வடக்கு மாவட்ட செயலாளரும் முன்னாள் தாம்பரம் நகர மன்ற தலைவருமான ம.கரிகாலன், இல்ல திருமண நிகழ்ச்சி நீலாங்கரை கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள ஆர்.கே.கன்வென்ஷன் மஹாலில் நாளை (ஞாயிற்றுக் கிழமை) காலை 10.30 மணி அளவில் நடைபெற உள்ளது. விழாவில் அமமுக பொது செயலாளர் டி.டி.வி. தினகரன் கலந்து கொண்டு மணமக்கள் டாக்டர். கே.அபிநயா, டாக்டர் இ.சோமசதீஷ் ஆகியோரை வாழ்த்துகிறார். விழாவில் கழக துணை பொது செயலாளர் ஜி.செந்தமிழன், தலைமை கழக நிர்வாகிகள் சி.ஆர். சரஸ்வதி, மாவட்ட செயலாளர்கள் சி.பி. ராமஜெயம், சேப்பாக்கம் எல்.ராஜேந்திரன், பி.ஆனந்தன், ஹஜ் கே.முகமது சித்திக், டி. சக்கரபாணி, பி.வி.சங்கர்ராஜா, மற்றும் அம்மா மக்கள் முன்னேற்றக் கழக நிர்வாகிகள், அரசியல் கட்சி பிரமுகர்கள், கூட்டணி கட்சி பிரமுகர்கள், தொழில் அதிபர்கள், சமூக ஆர்வலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்கள்.

சமத்துவ மக்கள் கழக இளைஞரணி செயலாளர் கார்த்திக் நாராயணன் பிறந்தநாளில் ஏழைகள் மாணவர்களுக்கு நலத்திட்ட உதவி

சென்னை, நவ.15–

சமத்துவ மக்கள் கழக மாநில இளைஞரணி செயலாளரும் சென்னை லீ பேலஸ் ஓட்டல் நிர்வாக இயக்குனருமான கார்த்திக் நாராயணனின் 41 – வது பிறந்தநாள் விழா நாளை மறுநாள் (17 – ந் தேதி) வெகு விமரிசையாக கொண்டாடப்ப டுகிறது. இதையொட்டி சமத்துவ மக்கள் கழக வடசென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பாஸ்கர் ஏற்பாட்டில் அன்று காலை 7 மணி அளவில் வண்ணாரப்பேட்டை ஜி.ஏ ரோட்டில் அமைந்துள்ள காமராஜர் சிலைக்கு பாலாபிஷேகம் மற்றும் மாலை அணிவித்து பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கப்படுகிறது. நாடார் பேரவை வட சென்னை மாவட்ட தலைவர் சீனிவாசன் ஏற்பாட்டில் தண்டையார்பேட்டை முகுந்தம்மன் ஆலயத்தில் சிறப்பு பூஜைகள் அன்னதானம் நலத்திட்ட உதவிகள், சமத்துவ மக்கள் கழகம் ஆர்.கே நகர் பகுதி செயலாளர் ராஜேஷ் ஏற்பாட்டில் சோலையப்பன் தெருவில் கழக கொடியேற்றி அன்னதானம் மற்றும் பள்ளி மாணவ – மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகள், காலை 9 மணியளவில் வடசென்னை மாவட்டம் நாடார் பேரவை சார்பில் தண்டையார்பேட்டை பகுதியில் இலவச பொது மருத்துவ முகாம் நடைபெறுகிறது. பின்னர் கழக அலுவலகத்தில் குடும்பத்தினர்கள், கழக நிர்வாகிகளுடன் கேக் வெட்டி தூய்மை பணியாளர்கள், பெண்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் கட்சியின் நிறுவன தலைவர் எர்ணாவூர் நாராயணன் வழங்குகிறார். எர்ணாவூர் நாடார் உறவின்முறை சார்பில் காமராஜர் நகர் முருகர் ஆலயத்தில் சிறப்பு பூஜைகள், அபிஷேகம், அன்னதானம் வழங்கப்படுகிறது. காலை 11 மணியளவில் எண்ணூர் நேதாஜி நகர் பகுதியில் திருவள்ளூர் வடக்கு மாவட்ட செயலாளர் மதுரை வீரன், திருவொற்றியூர் தொகுதி செயலாளர் முத்துக்குமார் ஆகியோர் ஏற்பாட்டில் அன்னதானம் வழங்கப்படுகிறது. கழக மாநில இளைஞரணி செயலாளர்கள் பாலசேகர், நடராஜன், சண்முகராஜா ஆகியோர் ஏற்பாட்டில் அன்னதானம் மற்றும் நலத்திட்ட உதவிகள், மணலி புதுநகர் ஐயா வைகுண்ட தர்மபதி ஆலயத்தில் சிறப்பு பூஜைகள் அன்னதானம் கழக மகளிர் அணி நிர்வாகிகள் ஏற்பா ட்டில் வழங்கப்பட்டுகிறது. ஓட்டல் சென்னை டீலக்ஸ், லீ பேலஸ், ஆப்பிள் ரெசி டென்சி நிறுவனங்களின் ஊழியர்கள் ஏற்பாட்டின் பேரில் கோயம்பேடு பகுதியில் பெண்களுக்கு சேலைகள் வழங்கப்படுகிறது.

மாநில இளைஞரணி செயலாளர் ராஜகுமார் ஏற்பாட்டில் சாலையோர வணிகர்களுக்கு குடை, மழைக்கால ஆடை மற்றும் தாய்மார்களுக்கு மளிகை சாமான்கள் அடங்கிய தொகுப்பு வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு விசுவ இந்து பரிஷத்தின் பொதுக்குழு கூட்டம் மாநில தலைவர் ஆர்.ஆர். கோபால்ஜி தலைமையில் நடந்தபோது எடுத்த படம்.

போதைப்பொருட்களை ஒழித்து இளைஞர்களின் எதிர்காலத்தை பாதுகாக்க வேண்டும்

விசுவ இந்து பரிஷத் மாநில பொதுக்குழுவில் தீர்மானம்

சென்னை, நவ.15–

போதைப்பொருட்களை முற்றிலும் ஒழித்து இளைஞர்களின் எதிர்காலத்தை பாதுகாக்க வேண்டும் என விசுவ இந்து பரிஷத் மாநில பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தமிழ்நாடு விசுவ இந்து பரிஷத்தின் 41–வது பொதுக்குழு கூட்டம் சென்னை தியாகராயநகரில் உள்ள தலைமை அலுவலகத்தில் மாநில தலைவர் ஆர்.ஆர். கோபால்ஜி தலைமையில் நேற்று நடந்தது.

பொதுச்செயலாளர் சோமசுந்தரம், இணை பொதுச்செயலாளர் ராமசுப்பு, பொருளாளர் சசிகுமார், செயல் தலைவர் செல்லமுத்து, துணைத் தலைவர் கிரிஜா சேஷாத்ரி மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். கூட்டத்தில் ஆர்.ஆர். கோபால்ஜி பேசும்போது, 'சட்ட சபை தேர்தலுக்கு முன்பு பல லட்சம் பேர் பங்கேற்கும் வகையில், பிரம்மாண்ட இந்து எழுச்சி மாநாடு நடக்க இருக்கிறது' என்றார்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

* இந்தியாவை சீர்குலைக்கும் நோக்கத்தில் டெல்லியில் நடத்தப்பட்ட தீவிரவாத தாக்குதல் சம்பவம் வரும் காலங்களில் நடக்காமல் இருப்பதை மத்திய, மாநில அரசுகள் உறுதிசெய்ய வேண்டும்.
* தமிழகத்தில் பெண்களின் அடிப்படை சுதந்திரம் கேள்விக்குறியாகியுள்ளது. பாலியல் வன்முறைகள் கட்டுக்கடங்காமல் பெருகி, பெரும் துயரமாக மாறி இருக்கிறது. பெண்களின் பாதுகாப்பு மற்றும் கண்ணியத்தை தமிழக அரசு உறுதி செய்ய வேண்டும்.
* தமிழகத்தில் சட்டம்–ஒழுங்கு பிரச்சினை கேள்விக்குறியாக உள்ளது. கஞ்சா உள்பட போதைப்பொருட்கள் தாராளமாக கிடைக்கும் சூழல் நிலவுவது தான் இதற்கு காரணம். இந்த விஷயத்தில், போலீசார் போதிய கவனம் செலுத்தி, போதைப்பொருட்களை முற்றிலும் ஒழித்து இளைஞர்களின் எதிர்காலத்தை பாதுகாக்க வேண்டும்.
* திருப்பரங்குன்றம் முருகன் கோவில் மலை மீதுள்ள தீப ஸ்தம்பத்தை சுற்றி வேலி அமைக்கப்பட்டுள்ளது. கார்த்திகை தீபம் ஏற்றும் வழிபாடுகளுக்கு எந்த தடையும் இல்லாத வகையில் அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பீகார் தேர்தலில் 21 தொகுதிகளில் வெற்றி

லோக் ஜனசக்தி தலைவர் சிராக் பஸ்வானுக்கு அம்பேத்கார் இயக்கங்களின் கூட்டமைப்பு வாழ்த்து

சென்னை, நவ.15–

டாக்டர் அம்பேத்கர் இயக்கங்களின் கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர் அன்பின் பொய்யாமொழி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது பீகார் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி அமோக வெற்றி பெற்றுள்ளது.இந்த வெற்றிக்கு காரணமான அண்ணல் டாக்டர் அம்பேத்கர் கொள்கைகளை பின்பற்றி கட்சி தொடங்கி பட்டியலின மக்களுக்காகவே வாழ்நாளை அர்ப்பணித்து உயிர் நீத்த ராம் விலாஸ் பஸ்வான் மகன் சிராக் பஸ்வான் தலைமையிலான லோக் ஜனசக்தி கட்சி மாநிலத்தில் உள் ள 40 தனித்தொகுதிகளில் கூட்டணியில் 29 தொகுதிகளை (தனி மற்றும் பொது) பெற்று 21 தொகுதிகளில் வெற்றி பெற்று இருக்கிறார். அதோடு மட்டுமல்லாது என்.டி.ஏ. கூட்டணிக்கு லோக் ஜனசக்தி கட்சியின் பட்டியலின மக்களின் ஓட்டு மொத்த வாக்குகளையும் அளித்து ஆட்சியை கைப்பற்றி உள்ளது. பீகாரில் ஆட்சி அமைய பட்டியலின தலித் மக்கள் ஓட்டுகள் தான் காரணம் என்பதை அங்குள்ள மக்கள் நிரூபித்து உள்ளனர். ஆனால் தமிழ்நாட்டில் 1 தொகுதி அல்லது 4 தொகுதி கொடுத்து தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. பட்டியலின மக்களின் ஓட்டு மொத்த வாக்குகளையும் தமிழகம் முழுவதும் பெற்று முதல்வர் ஆகி விடுகின்றனர். பீகாரில் டாக்டர் அம்பேத்கர் வழியில் வந்த ராம்விலாஸ் பஸ்வானின் மகன் சிராக் பஸ்வானுக்கு பீகாரில் ஆட்சி அமைப்பதற்கு அடித்தளம் அமைத்து கொடுத்ததற்காக தமிழ்நாட்டில் உள்ள ஒட்டு மொத்த டாக்டர் அம்பேத்கர் இயக்கங்களின் கூட்டமைப்பு சார்பில் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம். இனியாவது பீகார் மாநிலத்தில் வெற்றி பெற்றதற்கான உத்தியை தமிழ்நாட்டில் சமதாய தலைவர்கள் கையாள வேண்டும். இவ்வாறு அன்பின் பொய்யாமொழி கூறி உள்ளார்.

அன்பின் பொய்யாமொழி

இந்தியா சிமெண்ட் நிறுவனம், அல்ட்ராடெக் நிறுவனமும் இணைந்து சிமெண்ட் விற்பனையில் இந்தாண்டு தமிழக அளவில் சிறந்து விளங்கி முதலிடம் பிடித்த குமரி மாவட்டத்தை சேர்ந்த பிரபா டிரேடர்ஸ் நிறுவனத்தின் உரிமையாளர் பிரபா ராமகிருஷ்ணனுக்கு தங்கவிருதினை இந்திய சிமெண்ட் நிறுவனத்தின் மாநில தலைவர் நடேஷ், மாநில துணை தலைவர் முத்துசாமி, அல்ட்ராடெக் நிறுவனத்தின் தென்மண்டல தலைவர் சுப்பையா ஆகியோர் வழங்கிய காட்சி.

இயக்குனர் வி.சேகர் மரணம்; நாளை உடல் தகனம்

குடும்ப பட இயக்குநர் வி.சேகர் நேற்று மாலை உடல்நலக்குறைவால் காலமானார். அவரது உடல் தற்போது ராமச்சந்திரா மருத்துவமனையில் உள்ளது.

அங்கிருந்து நாளை காலை 8 மணிக்கு திரைப்பட இயக்குனர்கள் அனைவரும் அவரது உடலை ஊர்வலமாக எடுத்து வி.சேகரின் கோடம்பாக்கம், டாக்டர் சுப்பராயன் நகர் மெயின் ரோட்டில் உள்ள 'திருவள்ளுவர் இல்லத்திற்கு' கொண்டு செல்கின்றனர்.

அங்கு திரையுலையினர் பொதுமக்கள் அஞ்சலி செலுத்த உள்ளனர். மாலையில் அவரது சொந்த ஊரான திருவண்ணாமலை மாவட்டம் வேட்டவலம் அருகே உள்ள நெய்வாநத்தம் கிராமத்திற்கு எடுத்து செல்லப்படுகிறது. இறுதி அஞ்சலிக்கு பிறகு மாலை அவரது சொந்த ஊரான திருவண்ணாமலை வேட்டவலம் அருகே உள்ள நெய்வாநத்தம் கிராமத்தில் அவருக்கு இறுதி அஞ்சலியும், அதனைத் தொடர்ந்து இறுதிச் சடங்கும் நடைபெற உள்ளது.

காசிமேட்டில்

குடிபோதையில் தகராறு செய்தவர் கைது

ராயபுரம், நவ.15–

சென்னை காசிமேடு சிஜி காலனி பகுதியை சேர்ந்தவர் டேவிட். இவருக்கு திருமணமாகி திலோத்தமா என்ற மனைவியும் ஒரு மகனும் உள்ளனர். கருத்து வேறுபாடு காரணமாக கணவன்–மனைவி இருவரும் பிரிந்து வாழ்ந்து வருகின்றனர். திலோத்தமா வியாசர்பாடியில் உள்ள தாய் வீட்டில் வசித்து வந்த நிலையில் புதுவண்ணாரப்பேட்டை திடீர் நகர் பகுதியில் உள்ள அக்கா சுப்புலட்சுமி வீட்டிற்கு வந்துள்ளார். இதனை அறிந்த டேவிட் அங்கு சென்று தகராறில் ஈடுபட்டுள்ளார். அப்போது அங்கு வந்த டேவிட்டின் சகோதரர் பிரதீப் குடிபோதையில் அங்கிருந்தவர்களை தகாத வார்த்தையில் பேசி திலோத்தமாவை தாக்கியதாக கூறப்படுகிறது. இந்த சம்பவம் தொடர்பாக காசிமேடு மீன்பிடி துறைமுக போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. கோர்ட்டில் போலீசார் விரைந்து வந்து தகராறில் ஈடுபட்ட பிரதீப்பை கைது செய்து ஆஜர்படுத்தி ஜெயிலில் அடைத்தனர்.

வாக்காளர் பட்டியல் எஸ்.ஐ.ஆர். கணக்கீட்டு படிவங்களை நிரப்புவது எப்படி என்பது பற்றி பி எல் ஓ களுக்கு பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி விளக்கி கூறி பயிற்சி நடத்திய காட்சி அருகில் பல்லாவரம் மண்டலக் குழு தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை மற்றும் ராஜ்குமார் உள்ளனர்.

AMBIKA MULTI-STATE HEALTH SERVICES FOR THE WEAKER SECTIONCOOPERATIVE SOCIETY LTD
Regd No MSCS /CR / 1300 / 2020
2ND Floor, 53/2, Baratheeswarar Colony 3rd street, Kodambakkam Chennai - 600024

ELECTION PROGRAMME NOTICE

Present: Mrs.Rashmi Siddharath Zagade I.A.S
District Collector / Returning Officer

By virtue of the powers vested with me as Returning Officer upon appointment by the Cooperative Election Authority vide their order Election No 115/2025-26, dated 30.10.2025, it is hereby notified that there will be an Election General Body Meeting of the Society to Elect 9 (Nine) Directors for the term 2025-30 will be held on 04 January 2026 at AMBIKA MULTI-STATE HEALTH SERVICES FOR THE WEAKER SECTIONCOOPERATIVE SOCIETY LTD, 2ND Floor, 53/2, Baratheeswarar Colony 3rd street, Kodambakkam Chennai 600024, as per schedule. All the members are requested to attend this Election General Body meeting and they are eligible to contest and vote in the Election as per the Condition laid down in MSCS Amendment Act 2023.

ELECTION PROGRAMME

As per the Order No CEA-12011/405/2025, dated 30.10.2025, for conduct of Election

(A) General Information

Name of the Multistate cooperative Multipurpose Society	AMBIKA MULTI-STATE HEALTH SERVICES FOR THE WEAKER SECTIONCOOPERATIVE SOCIETY LTD, 2ND Floor, 53/2, Baratheeswarar Colony 3rd street, Kodambakkam, Chennai 600024
Registered No	Regd No MSCS/CR/1300/2020
Returning Officer	Mrs.Rashmi Siddharath Zagade I.A.S
Post for which Election being held	9 Nine (General -6, Women -2, SC/ST-1)
Area of Operation	Tamil Nadu & Karnataka
Number of Members	110
Polling Booth	Adequate polling booth in both the States

(B) Election Programme for Board of Directors

S.N0	Particulars	Date	Time
1.	Publication of Provisional List of members / Eligible to vote	1sT December 2025 (Monday)	11.00 A.M
2.	Ttmc Window for Raising Objection to the Provisional List	2nd December2025 to 6th December 2025 (Tuesday to Saturday)	11.00.A.M to 3.00 P.M
3.	Scrutiny of Objection reccivcd to the Provisional List (if any)	7th December2025 to 12th December 2025 (Monday to Friday)	11.00.A.M to 3.00 P.M
4.	Publication of Final List of Members / Eligible to Vote	13th December2025 (Saturday)	11.00.A.M
5.	Issue and Filing of Nomination Forms	15th December2025 to 20th December 2025 (Monday to Saturday)	11.00.A.M to 3.00 P.M
6.	Publication of List of Nominations Received	20th December2025 (Saturday)	5.00P.M
7.	Scrutiny of Received Nomination Forms	22nd December2025 (Monday)	11.00A.M onwards
8.	Publication of List of Valid Nominations	22nd December2025 (Monday)	5.00P.M
9.	Withdrawal of Nominations	23rd December2025 (Tuesday)	11.00A.M to 3.00 PM
10.	Publication of final List of Contestin Candidates	23rd December2025 (Tuesday)	5.00P.M
11.	Date of Polling if necessary	04th January 2026 (Sunday)	8.00 A.M to 4.00 P.M and all those who have entered polling station at 4.00 P.M or before will be allowed to cast vote
12.	Countin of Votes	04th January 2026 (Sunday)	Immediatel after ollin
12A	Submission of Form 19 M with recommendation for seeking approval of CEA before declaration of results of BOD	04th January 2026 (Sunday)	
13	Declaration of Results of Board of Directors	on or before 12th January 2026 (Monday)	After approval of Cooperative Election Authority, New Delhi on Form 19M
	(C) Election Programme or Office Bearers		
1	Announcement of Election Schedule	15th January 2026 (Thursday)	After Declaration of Result of' Board Members Election
	i. Time window for Filing Nomination	09.30 A.M to 11.30 AM 15th January 2026 (Thursday)	
	ii. Scrutiny of Nomination Papers	12.30 A.M to 02.00 AM 15th January 2026 (Thursday)	
	iii. Time & Date for Withdrawal	02.00 A.M to 04.00 PM 15th January 2026 (Thursday)	
	iv. Display of List of the contesting candidate and schcdulc of Elcction	04.00 PM 15th January 2026 (Thursday)	
2.	Meeting of newly Constituted Board & Publication of List for valid Nojninations, Poling (If re ured	19th January 2026 (Monday)	11.00 A.M.
3.	Declaration of Result of Election of Office Bearers	After approval of Coopcratise Election Authority. New Delhi on Form 19 N	

This Notice issued with the approval of Cooperative Election Authority
S/d
Date :14/11/2025 District Collector / Returning Officer

BEFORE THE RENT COURT-COURT OF SMALL CAUSES AT CHENNAI
R.L.T.O.P.No. 167 of 2025
(Under Regulation of Rights and Responsibilities of Landlords and Tenants Act, 2017)

A. Gopinath, S/o. Arunachalam ...Applicant
-Versus-
1. D. Ashoken S/o. Mr. Durai kannu
2. Mrs. Jamuna
Old Door No.18, New Door No.14, 2nd Floor, First Portion, 1st Street, Narayana swamy Thottam, Raja Annamalai Puram, Chennai-600 028. ...Respondents

As per direction of X Small Causes Court at Chennai, this paper publication has given on the behalf of Petitioner in above RLTOP. No.167/2025 against 2nd Respondent. The petitioner has initiated rent control proceedings against respondents 1 and 2 to evict the respondents from scheduled property and several times the Hon'ble X Small Causes Court has sent notice to 2nd Respondent, however said court notice was not served on her, hence this Hon'ble court granted permission to publish the notice in any Tamil daily news paper.

The above case is scheduled for hearing on 17.11.2025 for 2nd Respondent appearance before Hon'ble X Small Causes Court at Chennai, if you are fails appear on said date before court, you are may be Set Exparte and pass appropriate orders in your absences and Evict you from scheduled property.

M. NARESH, , BE.,BL., (Hons)
Advocate
Veras Firm103, Santhome High Road, Foreshore Estate, Chennai-600 028. Cell: 9382077771

படிவம் WIN 14
விதி 20-ஐ பார்க்கவும்
சென்னை பெஞ்ச்-ன் தேசிய நிறுவனச் சட்ட தீர்ப்பாயம் – I-ன் முன்னிலையில்
CBIGS அட்வர்ட்டைசிங் பிரைவேட் லிமிடெட்டின் விவகாரத்தில்
(நிறுவனங்கள் சட்டம்,1956-ன் கீழ் இணைக்கப்பட்ட நிறுவனம்)
மனு எண்: IA(CA)/203(CHE)/2025
CBIGS அட்வர்ட்டைசிங் பிரைவேட் லிமிடெட்
சார்பாக CA S பிரபு - மனுதாரர்
நிறுவன மனு எண்: CP/109/CHE/2021
CBIGS அட்வர்ட்டைசிங் பிரைவேட் லிமிடெட் - மனுதாரர்

முடித்தல் ஆணை அறிவிப்பு

அக்டோபர் 29, 2025 தேதியிட்ட இந்த வழக்கில் தீர்ப்பாயம் கொடுத்த உத்தரவின் மூலம் (2024 மார்ச் 20 தேதியிட்ட தற்காலிக லிக்விடேட்டரை நியமிப்பதற்கான முந்தைய உத்தரவு) மேலே பெயரிடப்பட்ட நிறுவனத்தை நிறுவனங்கள் சட்டம், 2013-ன் விதிகளின் கீழ் முடித்துவைக்க உத்தரவிடப்பட்டது.

நாள் : 13.11.2025 மனுதாரருக்கான பிரதிநிதி
CA S பிரபு
CBIGS அட்வர்ட்டைசிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் லிக்விடேட்டர்
IBBI பதிவு எண் IBBI/IPA-001/IP&P01275/2018-2019/11948
AFA No AA1/11948/02/311225/107485
செல்லுபடியாகும் காலம் 31.12.2025-வரை

ஆவடி மாநகராட்சி
ந.க.எண்.6185/2025/இ1 ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நாள். 13.11.2025

ஆவடி மாநகராட்சியில் வேது மாநில நிதிக்குழு மானியம் 202425 கீழ் கீழ்கண்ட பணிக்கு ஆவடி மாநகராட்சி ஆணையர் அவர்களால் ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்படுகின்றன.

வ. எண்.	பணியின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (ரூ. லட்சத்தில்)	முன்வைப்புத் தொகை (ரூபாயில்)
	வேது மாநில நிதிக்குழு மானியம் 2024-25		
1	வார்டு எண் 5–இல் கன்னடபாளையம் முதல் கோவில்பதாகை பிரதான சாலை வரை 910 மீட்டர் நீளத்தில் 250 மிமீ (CI PIPE) கழிவுநீர் பிரதான குழாய் அமைக்கும் பணி	100.00	1,00,000/-
2	வார்டு எண் 42, 43–இல் விவேகானந்தா பள்ளி தெருவிலிருந்து AGD நகர் (ஆவடி–பூவிருந்தவல்லி ஹை ரோடு வரையிலான 910 மீட்டர் நீளத்தில் 250 மிமீ (CI PIPE) கழிவுநீர் பிரதான குழாய் அமைக்கும் பணி	100.00	1,00,000/-
3	வார்டு எண் 5–இல் கன்னடபாளையம் முதல் கோவில்பதாகை பிரதான சாலையில் 1460 மீட்டர் நீளத்தில் 355 மிமீ (OPVC PIPE) மற்றும் 110 மிமீ (HDPE PIPE) குடிநீர் பிரதான குழாய்